**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.210/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயபாஸ்கர் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பிச்சைய்யா | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | கீழக்கலங்கல் | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 29th, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கீழக்கலங்கலில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு திருவிழாவிற்கு பெர்மிஷன் வாங்குவதற்காக காவல்நிலையம் சென்றபோது, போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 26.08.2023ம் தேதி, 07.00 மணிக்கு கீழக்கலங்கல் காமராஜர் நகர் கவிக்குயிலின் வீட்டுப்பக்கம் வைத்து போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்னர், அன்றைய தினம் சம்பவயிடத்தில் வைத்து இரத்தம் பட்ட மண் கொஞ்சம், இரத்தம் படாத மண் கொஞ்சம் ஆகியவற்றை போலீசார் அத்தாட்சி கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் நானும், வெள்ளத்துரை என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J
CHRISTAL
BABITHA
Date: 2025.10.29
14:56:23 +0530